12869

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)
General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)

| நேரம்: 1.00 மணித்தியாலம் | வரலாறு – I | பாட எண் : 33 T I |
| --- | --- | --- |
| பெயர் / சுட்டெண் ............................................................................ | | |

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

01. சிஹல அட்டகதா, உத்தர விஹார அட்டகதா, வினய அட்டகதா என்னும் நூல்கள் தொடர்பான சரியான கூற்று.

   1) இராசரட்டைக்கால பௌத்த சமயம் பற்றிக்கூறும் நூல்களாகும்
   2) கம்பளை - கோட்டை காலத்தில் எழுந்த தூது இலக்கியங்கள் ஆகும்.
   3) தீபவம்சம், மகாவம்சம் ஒத்தவையாக அமையக் காரணமான நூல்களாகும்
   4) கோட்டை - கண்டி காலத்தில் போர்க்காவியங்கள் எழுச்சிபெறக் காரணமான நூல்களாகும்

02. கல்வெட்டுக்கள் அவை எழுதப்பட்டுள்ள இடத்தின் இயல்பிற்கேற்ப பலவாறாக வகைப் படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் ஆரம்பகால கல்வெட்டுக்களின் வகையாக அமைவது

   1) பாறைக் கல்வெட்டு
   2) குகைக் கல்வெட்டு
   3) தூண் கல்வெட்டு
   4) சுவர்க் கல்வெட்டு

03. இலங்கையில் பின்வரும் எந்த இடத்தில் வரையப்பட்டுள்ள பெண் உருவங்கள் மின்னலையும் முகிலையும் காண்பிக்கும் குறியீடுகள் என ஆய்வாளர்களால் கூறப்பட்டுள்ளன.
   1) சீகிரியா குகை ஓவியங்கள்
   2) கண்டி தலதாமாளிகை ஓவியங்கள்
   3) தம்புள்ளை குகை ஓவியங்கள்
   4) மாளிகாவில ஓவியங்கள்

04. நாம் தொல்பொருள் மூலாதாரங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவது.
   1) அவை எமது முன்னோர்களால் பாதுகாக்கப்பட்டு வந்தமையால் ஆகும்.
   2) எமது நாட்டின் தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதால் ஆகும்.
   3) எமது நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்க வகையில் அமைந்திருப்பதால் ஆகும்.
   4) அரசியல் தலைவர்களின் கவனக்குவிப்புக்கு காரணமாக அமைவதால் ஆகும்.

05. கால அளவீட்டுக்கமைய 28000 வருடங்கள் பழமையான வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குரிய கற்சாதனங்கள் கிடைக்கப்பெற்றுள்ள குகை வசிப்பிடம் எது?

1) பட்டதொம்பலென
2) பாகியன்கல
3) பதிராஜவெல
4) அலிகல

06. ஆற்றுப்பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் ஆரம்பமான ஆரம்ப வரலாற்றுக்காலக் குடியிருப்புக்கள் ஆற்றங்கரையை நோக்கி வருதல் தொடர்பான தெளிவான குடியிருப்புக்களின் சான்றுகள் கிடைக்கப்பெற்ற நதி.

1) கும்புக்கன் ஓயா
2) மாணிக்க கங்கை
3) கிரிந்தி ஓயா
4) வளவை கங்கை

➤ பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 07ஆம் வினாவுக்கு விடை தருக.

A பிரதேச ஆட்சியாளர்களாக இருந்த மாமன்மாருடன் போரிட்டு அப்பிரதேசங்களைக் கைப்பற்றல்.

B சத்திரிய குல முறைப்படி இரண்டாவது தடவையாக முடிசூடுதல்.

C ஒழுங்கமைந்த யுத்தச் செயற்பாட்டுக்கு தலைமைத்துவத்தை வழங்குதல்

D நாட்டை நிர்வாக அலகுகளாகப் பிரித்து அதிகாரிகளை நியமித்தல்

E இலங்கைத் தீவை முதன் முதலில் ஒன்றுபடுத்துதல்

07. இவற்றுள் துட்டகைமுனு மன்னனோடு தொடர்புடைய கூற்றுக்களாக அமைபவை

1) CE
2) BD
3) BE
4) DE

08. மன்னராட்சிக் காலத்தில் பல்வேறு பொறுப்புக்களை நிறைவேற்றிய அதிகாரிகளுள் அரச ஆவணங்களின் தலைவர் எவ்வாறு அழைக்கப்பட்டார்

1) பன அதெக
2) படகரிக
3) பதகு
4) கனபெடிக

09. புராதன கால ஆசியக் கண்டத்தைச் சேர்ந் அரசர்கள் சூடிக்கொள்ள விரும்பிய பட்டமாக அமைவது.

1) ஆண்டவன்
2) மலையின் அரசன்
3) குபேரன்
4) போதிசத்துவர்

10. வைத்திய சேவைக்காக பிரசவ விடுதிகளை அமைத்த மன்னர்களை மட்டும் கொண்ட விடையாக அமைவது.

1) 1ஆம் உபதிஸ்ஸ, 4ஆம் காசியப்பன்
2) பண்டுகாபயன், 4ஆம் காசியப்பன்
3) 1ஆம் உபதிஸ்ஸ, பண்டுகாபயன்
4) 4ஆம் காசியப்பன், புத்ததாசன்

30. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் நேரடியாக மக்கள் ஆணையைக் கோரப் பெறக்கூடிய வழியாக பொதுசன அபிப்பிராயத் தேர்தலை அறிமுகம் செய்த அரசியல் யாப்புச் சீர்திருத்தம்.

1) டொனமூர் அரசியல் சீர்திருத்தம் 2) சோல்பரி அரசியல் சீர்திருத்தம்
3) முதலாம் குடியரசு அரசியல் யாப்பு 4) இரண்டாம் குடியரசு யாப்பு

31. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதியில் நெல் உற்பத்தி அதிகரித்தமைக்கு பிரதான காரணமாக அமைவது.

1) நெல் உற்பத்தியில் பிரித்தானியர் ஆர்வம் காட்டியமை.
2) காணியும் விவசாயத்தின் பொறுப்பும் இலங்கையர்களுக்கு வழங்கப்பட்டமை.
3) மக்களிடையே நெல்லுக்கான கேள்வி அதிகரித்தமை.
4) இலங்கையின் நெல்லுக்கு ஐரோப்பிய சந்தையில் அதிக கேள்வி ஏற்பட்டமை.

32. கிபி 1970 -1977 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அரசு பின்பற்றிய கைத்தொழில் தொடர்பான கொள்கையாக அமைந்தது.

1) பாரம்பரியக் கைத்தொழிலை ஊக்குவித்தல்
2) பாரிய கைத்தொழில்களை ஆரம்பித்தல்
3) பொருத்தும் கைத்தொழிலை மேற்கொள்ளல்
4) பதிலீட்டுக் கைத்தொழிலை ஆரம்பித்தல்

33. மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய கலைப்படைப்புக்களின் இயல்பாகக் கருதக்கூடியது.

1) கலைஞர்களின் பெயரால் படைப்புக்கள் வெளிவரல்
2) வகுப்புக்களின் பெயரால் படைப்புக்கள் வெளிவரல்
3) திருச்சபையால் படைப்புக்களுக்கு அனுசரணை வழங்கப்படல்
4) மக்களிடையே சமயப் பற்றினை ஏற்படுத்துதல்

34. கைத்தொழில் புரட்சிக் காலத்தில் கண்டுபிடிப்புக்களை மேற்கொண்ட ஆபிரகாம் டர்பி என்பரோடு தொடர்புடைய துறையாக அமைவது.

1) நெசவு 2) நிலக்கரி
3) இரும்புருக்கு 4) தொடர்பாடல்

➤ **கீழே தரப்பட்ட A, B என்ற கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 35ஆம் 36ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A - பெல்ஜியம் வழியாக பிரான்சை ஆக்கிரமித்தல்

B - போலந்தை ஆக்கிரமித்தல்

35. மேற்படி கூற்றுக்களோடு தொடர்புடைய நாடாக அமைவது

1) இத்தாலி 2) ஆஸ்திரியா 3) யப்பான் *4) ஜேர்மனி

36. இரண்டாம் உலக மகாயுத்தம் தொடர்பான சரியான விடையாக அமைவது.

1) A சரியானது B பிழையானது 2) A பிழையானது B சரியானது
3) Aயும் Bயும் சரியானது 4) A யும் Bயும் பிழையானது

➢ கீழே தரப்பட்டுள்ள A,B,C,D என்பவற்றில் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்களை அவதானித்து 37 தொடக்கம் 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A 1- அமெரிக்க சுதந்திரப் போர்
2- போஸ்டன் தேநீர் விருந்து

B 1- ரஷ்யப் புரட்சி
2- உணவு, நிலம், சமாதானம்

C 1- அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபடல்
2- பேர்ள் துறைமுகம் மீதான தாக்குதல்

D 1- ஸ்டேட் ஜெனரல் கூட்டப்படல்
2- 14ஆம் லூயி

37. முதலாவது ஏற்படுவதற்கு இரண்டாவது ஆரம்ப நிகழ்வாக அமையும் சோடி யாது?

1) A 2) B 3) C 4) D

38. இரண்டாவதன் காரணமாக முதலாவது நடைபெறுவதற்கு காரணமாக அமைந்த சோடி யாது?

1) A 2) B 3) C 4) D

39. முதலாவதற்கும் இரண்டாவதிற்கும் இடையில் எவ்வித தொடர்பையும் காட்டாத சோடி யாத?

1) A 2) B 3) C 4) D

40. சர்வதேச சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக அமையும் மோதல்கள் குறித்து ஆராய்ந்து அவற்றை சமாதானமாகத் தீர்ப்பதற்கு சிபாரிசுகளை முன்வைக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் கூறாக அமைவது.

1) பொதுச்சபை 2) பாதுகாப்புச்சபை 3) செயலகம் 4) சர்வதேச நீதிமன்றம்

(40 X 2 = 80 புள்ளிகள்)

12756

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | வரலாறு - II<br>History - II | பாட எண் : 33 T II |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................ | | |

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.
கவனிக்க:
- பகுதி I இன் வினா முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இல் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
- எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01. (அ) கீழே (i) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்திலும் (ii) எனக் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தின் பகுதியிலும் குறித்துப் பெயரிடுக.

(i) கல்லோயா, பதவியாக் குளம், கொத்மலை நீர்த்தேக்கம், குருநாகல், கம்பளை, புத்தளம், ஹேமன்கேயில், கலாத்தை, நீர்கொழும்பு மினிஹாகல்கந்த, பூநகரி, சீகிரியா. (12 புள்ளிகள்)

(ii) பர்மா, உரோம், பத்தேவியா, ஹிரோசீமா, சுயெஸ் கால்வாய், இஸ்தான்புல். (6 புள்ளிகள்)

(ஆ) (I) பின்வரும் கூற்றுக்களுக்குரிய விடைகளை A,B,C,D ஒழுங்கில் தருக.

A. சகல பிரதேசத்தலைவர்களுடனும் நல்லுறவைப் பேண வேண்டியதன் தேவையை உணர்ந்து செயற்பட்ட அநுராதபுர ஆட்சியாளன்.

B. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய இரு ஐரோப்பிய இனத்தவர்களுடன் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கண்டியின் ஆட்சியாளன்

C. பிரித்தானியராட்சிக் காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற சமய தேசிய மறுமலர்ச்சிக்கு பங்களிப்புச்செய்த எகிப்து நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு வருகை தந்த இஸ்லாமியர்.

D. இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் நாசிகளுக்கு எதிரான போரில் பிரித்தானிய மக்களையும் அதன் குடியேற்ற நாடுகளையும் ஈடுபடுத்துவதில் வெற்றி பெற்ற பிரித்தானியப் பிரதமர். (4 புள்ளிகள்)

➤ A,B படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.


(A)

(II) 1. படம் A இல் எதன் மாதிரி அமைப்பு காட்டப்பட்டுள்ளது?
2. இந்த அமைப்பு புராதன காலத்தில் எத்தேவைக்காக பயன்படுத்தப்பட்டது?
3. இதனை இயக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட சக்தி எது?
4. இந்த மாதிரி அமைப்பின் உண்மையான அமைப்பு காணப்பட்ட இடம் எது?

(4 புள்ளிகள்)

(III) 1. படம் B இல் காட்டப்பட்டிருப்பவர் யார்?
2. இவர் பதவி வகித்த சிறப்புப் பதவியின் பெயர் யாது?
3. இவரது பதவியை நியமனம் செய்யும் அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டது?
4. இவர் இப்பதவிக்கு வருவதற்கு முதல் வகித்த பதவியின் பெயர் என்ன?



(B) (4 புள்ளிகள்)

## பகுதி - II

02. (I) முன்வரலாற்றுகால பண்பாட்டைக் கற்பதற்கு ஆதாரமாக அமையும் முன்வரலாற்றுக்கால மயானங்களுள் ஒன்றான கல்லறை மயானங்கள் அமைந்திருந்த இடங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(II) A) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் உணவைப் பெற்றுக்கொண்ட முறைகள் **இரண்டைக்** குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

B) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த **இரு** வகையான வாழ்விடங்களும் எவை? (2 புள்ளிகள்)

(III) ஆரம்பவரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் ஒழுங்கமைப்பும் நிர்வாகமும் செயற்படுத்தப்பட்ட முறையினை **இரு** காரணிகளின் துணையுடன் விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) வரலாற்றுக் காலத்தில் விவசாயம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறையினை **மூன்று** பிரிவுகளின் ஊடாக விளக்குக. (6 புள்ளிகள்)

03. (I) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கல்லாயுதங்களை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட **மூன்று** வகையான கற்களைப் பெயரிடுக. (3 புள்ளிகள்)

(II) A) எலஹெராக் கால்வாய் மூலம் நீரைப் பெற்றுக்கொள்ளும் குளங்கள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

B) புராதன காலத்தில் பௌத்த பிக்குகளின் நீர்த்தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட பொய்கைகள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(III) புராதன காலத்தில் பாரிய குளமொன்றானது பல தொழிநுட்பச் சிறப்புக்களைக் கொண்டமைந்த கூறுகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. அவ்வாறான கூறுகள் **இரண்டைக்** குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) முன்வரலாற்றுக்கால மனிதர்களின் பிரயோக தொழிநுட்ப ஆற்றலை வெளிப்படுத்தும் முனைப்பான சந்தர்ப்பங்கள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

04. (I) மாயரட்டைப் பிரதேச எல்லைக்குள் அமைக்கப்பட்ட இரண்டாம் நகரமயமாக்கல் நகரங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) பின்வரும் A,B,C,D கூற்றுக்களோடு தொடர்புடைய விடயங்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

A) மகா விஜயபாகு பொலன்னறுவையைத் தலைநகராக்கியதில் செல்வாக்குச் செலுத்திய பிரதான துறைமுகம்.

B) இலங்கையின் தென்பகுதியின் கலாசாரத்தைக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்ந்த நகரம்.

C) சங்க தளபதியினால் மினிப்பே என்னும் இடத்தில் கோட்டை அமைக்கப்பட்ட நதிக்கரை.

D) இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்த பின்னர் இலங்கையின் வடமத்திய, கிழக்கு, வடமேல் மாகாணங்களில் சனத்தொகை குறைவான பகுதிகளில் தோன்றிய சிறிய ஆட்சி அலகுகளுக்கு வழங்கப்பட்ட பெயர். (4 புள்ளிகள்)

(யாழ்ப்பாண இராச்சியம், மாகம, கல்லோயா, கோகர்ண, மகாவலிகங்கை, வன்னி இராச்சியம்)

(III) புராதன காலத்தில் உலர்வலயத்தில் நகரங்கள் தோற்றம் பெறுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) தம்பதெனியாவின் சிறந்த ஆட்சியாளனாக இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் கருதப்படுகின்றார். அந்த மன்னனால் ஆற்றப்பட்ட அரசியல், இலக்கிய, சமயப் பணிகள் ஒவ்வொன்றினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

05 (I) ஆறாம் விஜயபாகு மன்னன் கி.பி 1521இல் கொலை செய்யப்பட்ட பின்னர் இலங்கையில் காணப்பட்ட இராச்சியங்களுள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) பின்வரும் A,B,C,D கூற்றுக்களோடு தொடர்புடைய விடயங்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.

A) பிரதானிகளின் கட்டளைகளைச் செய்திகளை பிராந்திய அதிகாரிகளுக்குகொண்டு சென்றவர்கள்.

B) அரச மாளிகைச் செயற்பாடுகளில் உணவு வழங்கலுக்குப் பொறுப்பான அதிகாரி

C) கண்டி இராச்சிய காலத்தில் நெசவுக்காக அறவிடப்பட்ட வரி

D) 1ஆம் விமலதர்மசூரிய மன்னனால் இரும்புருக்கு கைத்தொழிலை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்ட இடங்களில் ஒன்று. (4 புள்ளிகள்)

(வலப்பனை, ஹெந்தபத்த, கிரிவவுல, பத்வடனநிலமே, கடுபுள்ளே, சலுவடனநிலமே, படஹெலபத்த, கோறளை)

(III) கோட்டை இராச்சியம் இலகுவில் போர்த்துக்கேயர் வசமாகியதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) கண்டி இராச்சிய சமூக அமைப்பின் இயல்புகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

06 (I) A) இலங்கையில் கடமையாற்றிய இறுதி ஒல்லாந்து ஆளுநர் யார்? (1 புள்ளி)

B) பிரித்தானியர் கண்டி இராச்சியத்தை கைப்பற்றுவதற்கு முன்னர் தொடர்புகளை ஏற்படுத்திய கண்டி மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) பின்வரும் A,B,C,D கூற்றுக்களோடு தொடர்புடைய விடயங்களை எழுதுக.

A) கண்டி இராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்படுவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதில் முக்கிய பங்களிப்புச் செய்த அதிகாரி

B) இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானிய அரசும் ஆட்சி நடவடிக்கைகளில் ஈடுபடல் வேண்டும் எனச் சிபாரிசு செய்தவர்.

C) முதலாவது சுதந்திரப் போராட்டக் காலத்தில் நிலத்தை பாழடையச்செய்யும் கொள்கையைக் கடைப்பிடித்த ஆளுநர்.

D) இரண்டாவது சுதந்திரப் போராட்டக்காலத்தில் தம்புள்ளையில் மன்னனாக முடிசூடிக் கொண்டவர் (4 புள்ளிகள்)

(III) கி.பி 1815இல் பிரித்தானியரால் கண்டி இராச்சியம் கைப்பற்றப்படுவதற்கு ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னனின் செயற்பாடுகள் பங்களிப்புச் செய்தமையை இரு ஆதாரங்களின் ஊடாக விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) பிரித்தானியருக்கு எதிராக இலங்கையர்கள் கி.பி 1818இல் சுதந்திரப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தமைக்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

07. (I) பின்வரும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களோடு தொடர்புடைய யாப்புக்களை குறிப்பிடுக.

(A) இனவாரிப் பிரதிநிதித்துவமுறை நீக்கப்படல்

(B) மகாதேசாதிபதி என்னும் பதவி அறிமுகப்படுத்தப்படல்

(C) அரசின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்படல் (3 புள்ளிகள்)

(II) A) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தொழிற்சங்கங்களை அமைத்து தொழிலாளர் உரிமைகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட முக்கிய தலைவர்கள் இருவரைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

B) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களில் ஒன்றாக மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றம் அமைந்துள்ளது. அவ்வர்க்கத்தினர் தோற்றம் பெற்றமையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டு தருக. (2 புள்ளிகள்)

(III) இலங்கையின் உலர்வலயம் குடியேற்றத் திட்டங்களை அமைப்பதற்கு ஏற்ற இடமாகத் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) சுதந்திர இலங்கையில் நெல் விவசாயத்தை முன்னேற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி – III

08. (I) மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த பின்வரும் எழுத்தாளர்களோடு தொடர்புடைய தாய் நாடுகளைக் குறிப்பிடுக.

(A) பொக்காஷியோ (B) தோமஸ்மூர் (C) இராஸ்மஸ் (3 புள்ளிகள்)

(II) மறுமலர்ச்சிக் காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் A,B,C,D எனத் தரப்பட்டுள்ளன இவற்றோடு தொடர்புடையவர்களை முறையே விடைத்தாளில் எழுதுக.

A) புளோரன்ஸ் நகரில் கலைகளை வளர்ப்பதில் பங்களிப்புச் செய்தவர்

B) சிஸ்டைன் ஆலயத்தின் பாவுகையில் உலகப்புகழ்பெற்ற ஓவியங்களை வரைந்தவர்

C) ஆபிரிக்காவின் தென்முனைக்கு நன்னம்பிக்கைமுனை எனப்பெயர் சூட்டியவர்

D) வியாழனைச்சூழ உபகோள்கள் இருப்பதைக் கண்டறிந்தவர் (4 புள்ளிகள்)

(III) மறுமலர்ச்சியானது உலகமயமாதலுக்கு பங்களிப்புச் செய்த முறையினை இரு காரணிகளின் ஊடாக விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டுத் துறைகளில் ஏற்படுத்திய சாதகமான மாற்றங்கள் ஒவ்வொன்று வீதம் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

09 (I) அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைப்பதில் ஈடுபட்ட ஐரோப்பிய நாடுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(II) அமெரிக்க சுதந்திரப் போர் இடம்பெறுவதில் செல்வாக்குச்செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(III) பிரான்சியப் புரட்சி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய அரசியல் காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(IV) உலக அரசியல் அரங்கில் மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சியாக ரஷ்யப் புரட்சி கொள்ளப்படுவதற்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Drpartment of Education Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை – 2022(2023)
(மூன்றாம் தவணை)

| தரம் 11 | வரலாறு | 33 | T | II | புள்ளித்திட்டம் |
|---|---|---|---|---|---|

## வரலாறு - I

| | | | |
|---|---|---|---|
| 1. (3) | 11. (4) | 21. (4) | 31. (2) |
| 2. (2) | 12. (1) | 22. (3) | 32. (4) |
| 3. (1) | 13. (3) | 23. (1) | 33. (1) |
| 4. (2) | 14. (4) | 24. (2) | 34. (3) |
| 5. (1) | 15. (2) | 25. (1) | 35. (4) |
| 6. (3) | 16. (1) | 26. (3) | 36. (2) |
| 7. (1) | 17. (4) | 27. (1) | 37. (1) |
| 8. (4) | 18. (3) | 28. (2) | 38. (3) |
| 9. (2) | 19. (1) | 29. (3) | 39. (4) |
| 10. (3) | 20. (2) | 30. (4) | 40. (2) |

( 40x2 = 80 புள்ளிகள் )

## வரலாறு - II

1) (அ) (I) குறிக்கப்பட்ட இலங்கைப் புறவுருவப் படத்தினைப் பார்க்கவும் (12 புள்ளிகள்)

(II) குறிக்கப்பட்ட உலகப் புறவுருவப் படத்தினைப் பார்க்கவும் (06 புள்ளிகள்)

(ஆ) (i) A பண்டுகாபயன் B 2ஆம் இராஜசிங்கன்

C ஓராபிபாஷா D வின்சன் சேர்ச்சில் (04 புள்ளிகள்)

(ii) (a) 1) இரும்புச் சூளை 2) இரும்பைப் பிரித்தெடுப்பதற்கு

3) இயற்கையான காற்றுச்சக்தி 4) சமனலவெவ (04 புள்ளிகள்)

(b) 1) வில்லியம் கோபல்லாவ 2) பெயரளவு ஜனாதிபதி

3) பிரதமர் 4) ஆளுநர் நாயகம் (04 புள்ளிகள்)

2) (i) • இப்பன்கட்டுவ • கல்சோஹன் • பட்டிகல்பொத்த (03 புள்ளிகள்)

(ii) A) வேட்டையாடுதல், அலைந்து திரிந்து உணவைச் சேகரித்தல் (02 புள்ளிகள்)

B) இயற்கையான கற்குகைகள், திறந்த வெளியான வேட்டையிடங்கள் / வெட்டவெளிகள் / வெட்டவெளிப் பாசறைகள் (02 புள்ளிகள்)

(iii) • குடும்பம் கிராமத்தின் முக்கியத்துவம் வாய்ந்த அலகாக இருந்தமை

- குடும்பத் தலைவன் பிராமிக் கல்வெட்டுக்களில் "கஹபதி" என அழைக்கப்பட்டமை
- குடும்பத் தலைவர்களைக் கொண்ட குழுவின் தலைவன் "கமிக" என அழைக்கப்பட்டமை
- பத்துக் கிராமத்தலைவர்களைக் கொண்ட சபை மூலம் பிரதேச ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டமை (02 புள்ளிகள்)

இரண்டை விளக்கி எழுதியிருந்தால் 03 புள்ளிகள் வழங்கவும்

(iv) • நெற் பயிர்ச்செய்கை

- சேனைப் பயிர்ச்செய்கை
- மந்தை வளர்ப்பு (03 புள்ளிகள்)

மூன்றையும் விளக்கி எழுதியிருந்தால் 03 புள்ளிகள் வழங்கவும்

3). (i) கருங்கல், படிகக்கல், பளிங்குக்கல் (03 புள்ளிகள்)

(ii) A) மின்னேரியாக் குளம் , கந்தளாய் குளம், கவுடுலு வாவி, கிரித்தலை வாவி (02 புள்ளிகள்)

B) குட்டம் பொய்கை, யானைப் பொய்கை, தாமரைப் பொய்கை (02 புள்ளிகள

(iii) • குளக்கட்டு • அலைதாங்கி • கலிங்குகள்

• கலிங்குத்தொட்டி • வெளிவான்கதவு (கருங்கை) (02 புள்ளிகள்)

இவற்றில் இரண்டிற்கு விளக்கமளித்திருந்தால் 3 புள்ளிகள் வழங்கவும்

(iv) • வீடமைப்புத் தொழிநுட்பம் • மட்பாண்டத் தொழிநுட்பம்

• களிமண்ஓடுத் தொழிநுட்பம்

இவற்றில் மூன்றினைக் குறிப்பிட்டால் 3 புள்ளிகள்

மூன்றிற்கு விளக்கமளித்திருந்தால் 3 புள்ளிகள் வழங்கவும் (06 புள்ளிகள்)

4) (i) யாப்பகுவ, தம்பதெனியா, கோட்டை, குருநாகல் (03 புள்ளிகள்)

(ii) A) கோகர்ண B) மாகம C) மகாவலி கங்கை D) வன்னி இராச்சியம் (02 புள்ளிகள்)

(iii) • நிரந்தரமாக ஓரிடத்தில் குடியேறியமை • மிகை உற்பத்தி காணப்பட்டமை

• வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி அடைந்தமை • அரச அனுசரணை கிடைத்தமை

காரணம் 2 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (05 புள்ளிகள்)

(IV) **அரசியல் பணிகள்**

1 சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பை முறியடித்தமை.
2 கலிங்கமாகனிடமிருந்து நாட்டை மீட்டமை
3 சந்திரபானுவின் இரண்டாவது படையெடுப்பை முறியடித்தமை

**சமயப்பணி**

1 பிக்குகளின் ஒழுக்க நெறிக்கோவையாகிய தம்பதெனிய கதிகாவத்தையை எழுதுவித்தான். சங்கராஜ மகாதேரர் தலைமையிலான அவையிலேயே இது தொகுக்கப்பட்டது.
2 வருடந்தோறும் உபசம்பதா சடங்கினை செய்வித்ததோடு தானும் பங்குகொண்டான்.
3 பெலிகலையிலிருந்த தந்ததாதுவை எடுத்து வந்து தம்பதெனியாவில் தலதாமாளிகை அமைத்தான்.
4 தேவபதிராஜ என்ற அமைச்சரின் உதவியோடு, பௌத்த சமய கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பாடுபட்டான்.

**இலக்கியப்பணி**

1 சிறந்த கல்விமானாகவும் பண்டிதனாகவும் விளங்கினான் இதனால் கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித என அழைக்கப்பட்டான்.
2 கவிசிலுமின என்ற கவிதை நூலை எழுதினான்.
3 அரண்மனைச் சூழலில் இலக்கிய அறிவுமிக்க புலவர்களைப் போற்றி வந்ததுடன் இலக்கியங்கள் பலவும் உருவாவதற்கான சூழலை ஏற்படுத்தினான்.

காரணம் 3 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (06 புள்ளிகள்)

5) (i) • யாழ்ப்பாணம் • கண்டி • கோட்டை • சீதாவாக்கை • றைகம (03 புள்ளிகள்)

(ii) A) கடுபுள்ளே B) பத்வடன நிலமே C) ஹேந்த பத்த D) வலப்பனை (04 புள்ளிகள்)

(iii) • கோட்டை ஆட்சியாளர்களிடம் காணப்பட்ட ஒற்றுமையின்மை
• தர்மபாலவின் செயற்பாடுகள் • போர்த்துக்கேயரின் படைவலிமை
காரணம் 2 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (05 புள்ளிகள்)

(iv) • உரிமை, அனுபவித்தல் அடிப்படையில் பல்வேறு நிலப் பிரிவுகள் காணப்பட்டமை
• பல்வேறு திருமண முறைகள் காணப்பட்டமை
• கிராமிய சமூக அமைப்பே காணப்பட்டது.
• தந்தையை முதன்மையாகக் கொண்ட சமூக அமைப்பு காணப்பட்டது.
• மதகுருமார்கள், பிரபுக்கள், குடிமக்கள் என மூன்று வகுப்புக்கள் காணப்பட்டன.
காரணம் 3 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (06 புள்ளிகள்)

6) (i) A) பன் எங்கள் பெக (1 புள்ளி)

B) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன், இராஜாதி இராஜசிங்கன் (02 புள்ளிகள்)

(ii) A) ஜோன்டொயிலி B) கேணல் மீபுரன் C) றொபட் பிரெள்ரிக் D) கொங்காலே கொட பண்டா

(04 புள்ளிகள்)

(iii) • முக்கிய பதவிகளை நாயக்க வம்சத்தவருக்கு வழங்கியமை
- தன்னை அரசனாக்கிய பிலிமத்தலாவையை கொலை செய்தமை
- பொதுமக்களுக்கு கொடூரமான தண்டனை வழங்கிமை
- பௌத்த பிக்குகளுக்கு தண்டனை வழங்கியமை
- மதுவுக்கு அடிமையாகியமை

காரணம் 2 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (05 புள்ளிகள்)

(iv) • சுதந்திரத்தை இழந்தமையும் அரசன் இல்லாமையும் பற்றிய மனவேதனை
- சமய, கலாசார பாதுகாப்புத் தொடர்பாக பிரச்சினைகள்
- மலைநாட்டுப் பிரதானிகளுக்கு ஏற்பட்ட தாக்கம்
- மடுகே முகாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் நியமிக்கப்பட்டமை (உடனடிக் காரணம்)

காரணம் 3 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (06 புள்ளிகள்)

7) (i) A) டொனமூர் B) சோல்பரி C) கோல்புறூக் - கமரன் (03 புள்ளிகள்)

(ii) A) A.F குணசிங்க, கோ.நடேசஐயர் (02 புள்ளிகள்)

B) கல்வி, செல்வம் (02 புள்ளிகள்)

(iii) • உலர் வலயத்தில் உள்ள புராதன குளங்கள், கால்வாய்கள் என்பவற்றைப் புனரமைத்து அங்குள்ள நிலத்தை அபிவிருத்திக்குப் பயன்படுத்திக் கொள்ளல்
- ஈரவலயத்தில் காணப்படும் நிலப்பற்றாக்குறைக்கு பரிகாரம் காணுதல்.
- நீண்ட காலமாகக் காடாகிக் கிடந்த நிலத்தை விவசாயத்திற்கு உகந்ததாக மாற்றியமைத்தல்
- உலர் வலயக் காணிகளைக் கூடிய பயன்பாட்டுடன் பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான நிரந்தர நீர்வசதியை வழங்குதல்
- நீர் வளத்தின் மூலம் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி நிலமற்ற விவசாயிகளுக்குக் காணிகளைப் பெற்றுக்கொடுத்து பயிர்செய்கையைப் பரவலடையச் செய்தல்

காரணம் 2 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (05 புள்ளிகள்)

(iv) • 1948இல் நெல்லுக்கு உத்தரவாத விலை அறிமுகப்படுத்தப்பட்டல்.
- ஆராய்ச்சி நிலையங்களை உருவாக்குதல், புதிய நெல் இனங்களை அறிமுகப்படுத்துதல்
- விவசாய சேவை மத்திய நிலையங்களை ஆரம்பித்தல்
- அரசாங்க வங்கிகள் மூலம் விசாயிகளுக்க கடன் வசதியைப் பெற்றுக்கொடுத்தல்.

காரணம் 3 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (06 புள்ளிகள்)

## பகுதி III

8) (i) A) இத்தாலி B) இங்கிலாந்து C) பிரான்ஸ் (03 புள்ளிகள்)

(ii) A) மெடிசி குடும்பம் B) மைக்கல் அஞ்சலோ

C) கடலோடி ஹென்றி / 4ஆம் ஹென்றி D) கலிலியோ கலிலி (02 புள்ளிகள்)

(iii) • வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை
- ஐரோப்பிய பண்பாடுகள் பரவலடைந்தமை
- அச்சுத்தொழில் உலகெங்கும் பரவியமை

காரணம் 2 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (05 புள்ளிகள்)

(iv) **அரசியல் மாற்றங்கள்**

- ஆங்கிலேயரால் கண்டி கைப்பற்றப்பட்டதும் முடியாட்சி முறை நீக்கப்பட்டது.
- அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு பாராளுமன்ற ஆட்சி முறை தோன்ற வழிவகுத்தது. (தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமையால் ஜனநாயக அம்சங்கள் தோன்றக் காரணமாகியது)
- பிரதேச ஆட்சி முறைகள் மாற்றமடைந்தன. மரபு ரீதியான அலுவர்களுக்குப் பதிலாக புதிய ஆட்சி முறைக்குப் பொருத்தமான அலுவர்கள் நியமிக்கப்பட்டனர். (அமைச்சர், அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர், கணக்காளர் நாயகம் போன்ற பதவிகள்)
- பழைய சட்டதிட்டங்கள் நீக்கப்பட்டன. ஒல்லாந்தரால் ரோமன்டச்சுச்சட்டம் கொண்டுவரப்பட்டது. பிரித்தானியர் காலத்தில் சமகால ஐரோப்பியச்சட்டங்களும் நீதிமன்றத் தொகுதிகளும் கொண்டுவரப்பட்டன.

**பொருளாதார மாற்றங்கள்**

- ஐரோப்பியர் இலங்கைக்கு வந்ததனால் நெருங்கிய வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டது.
- வர்த்தக நோக்குடன் ஒல்லாந்தரால் கறுவாவும், பிரித்தானியரால் கோப்பி, தேயிலை, கொக்கோ, இறப்பர் போன்ற வர்த்தகப் பயிர்களும் பயிரிட ஆரம்பித்தனர்.
- இலங்கையில் முன்னர் நிலவிய சுயதேவைப்பூர்த்திப் பொருளாதாரமானது ஐரோப்பியரால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப்பயிர்கள் காரணமாக சிதைவடைந்து உணவை இறக்குமதி செய்ய வேண்டிய ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரமாக மாறியது.
- பணப்புழக்கம் அதிகரித்தது
- புகையிரதப்பாதைகள், பெருந்தெருக்கள், துறைமுக விருத்தி என்பன பெருந்தோட்டத்துறைக்காக உருவாக்கப்பட்டன.
- கொழும்பு, காலி, திருகோணமலை போன்ற முக்கிய வர்த்தக நகரங்கள் தோன்றின.
- மத்தியதர வகுப்பினர் தோற்றம் பெற்றமை

**சமூக பண்பாட்டு மாற்றங்கள்**

- ஒல்லாந்தரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அச்சுக்கலையானது பிரித்தானியர் காலத்தில் முக்கியம் பெற்றமையினால் பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகள் என்பன வெளியிடப்பட்டதனால் சமூகம் அறிவுத்துறையில் வளர்ச்சியடைந்தது.
- ஐரோப்பாவிற்கு மேற்படிப்பிற்கு சென்று வந்தவர்களால் மேற்கத்தேய சிந்தனைகள் பரவலடையக் காரணமாகியது.
- போர்த்துக்கேயர் காலத்தில் கத்தோலிக்கமும், ஒல்லாந்தர் காலத்தில் புரட்டஸ்தாந்து மதமும் பரவியது.
- ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்விச் செயற்பாடுகள் காரணமாக மேலைத்தேய கல்வி முறை இந்நாட்டில் பரவியது.
- ஐரோப்பியரது ஆட்சியின் காரணமாக ஆடை அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டது.
- ஐரோப்பிய கட்டடக்கலை, ஐரோப்பிய மொழிச்சொற்கள் சுதேச மொழிகளில் கலத்தல் போன்றவையும் ஏற்பட்டது.

காரணம் 3 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (06 புள்ளிகள்)

9 (i) பிரித்தானியா, பிரான்ஸ், போர்த்துக்கல், ஒல்லாந்து, ஸ்பானியா (03 புள்ளிகள்)

(ii)
- பிரித்தானியப் பாராளுமன்றத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வரிகள் (முத்திரை வரி, தேயிலை வரி, கண்ணாடி வரி, , கடதாசி வரி)
- அமெரிக்க குடியேற்றவாசிகள் நீண்ட காலமாகப் பிரித்தானிய தலையீட்டிற்கு மாறாக சுய நிர்வாகத்திற்குப் பழக்கப்பட்டிருந்தமை
- பிரித்தானியர் பின்பற்றிய தாய்நாட்டிற்குச் சாதகமான பொருளாதாரக் கொள்கை
- குடியேற்றவாசிகளின் நீதியான போராட்டங்களைக் கட்டுப்படுத்த பிரித்தானியா நடவடிக்கை எடுத்தமை (04 புள்ளிகள்)


(iii)
- மன்னன் கொண்டிருந்த வரையறையற்ற அதிகாரங்கள்
- மன்னன் அனுபவித்த சுகபோக வாழ்வு
- ஊழல் நிறைந்த முடியாட்சி

காரணம் 2 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (05 புள்ளிகள்)


(iv)
- சமவுடமைக்கொள்கை உலகம் முழுவதும் பரவியமை
- சமவுடமைக் கொள்கைகளைக் கொண்ட அரசாங்கங்கள் உருவானமை
- ரஷ்யாவை மையமாகக் கொண்ட சமவுடமைவாத அணி தோற்றம் பெற்றமை

காரணம் 3 புள்ளிகள் விளக்கம் 3 புள்ளிகள் (06 புள்ளிகள்)

01.அ(I)


ஹொமன்ஹெயில்
பூநகரி
N
பதவியா வாவி
புத்தளம்
சீகிரியா
குருநாகல்
நீர்கொழும்பு
கம்பளை
கல்லோயா
கொத்மலை நீர்த்தேக்கம்
களுத்துறை
மினிஹாகல்கந்

01. அ(II)


N
ரோம்
இஸ்தான்புல்
ஹிரோசிமா
சுயெஸ்கால்வாய்
பர்மா
ஆபிரிக்கா
Africa
இந்து சமுத்திரம்
Indian Ocean
பத்தேவியா